# நெருக்கு நேர்

டொக்டர் எம். கே. முருகானந்தனுடன்
மாணவ எழுத்தாளர்கள்
செவ்வி

பருத்தித்துறை

தை 1992

# நேருக்கு நேர்

டொக்டர் எம். கே முருகானந்தனுடன்
மாணவ எழுத்தாளர்கள்
செவ்வி

பருத்தித்துறை
தை 1992

# வாழ்த்து மொழி

பாடசாலைக் கல்வி வெளி உலகுடன் இணைவதன் மூலம் முழுமையைப் பெறும். ஏட்டுக் கல்வியானது, உயிர்த்துடிப்புடைய கல்வியாக, வாழ்வுக் கல்வியாக மாற்றம் பெற வேண்டும் அந்தச் செயல் நன்கு சிறப்பாக அமைவதற்கு வெளியுலகில் உள்ள 'ஆளுமை' பெற்ற சான்றோர்களுடன் தொடர்பு கொள்ளலும் சிறந்த கருவியாக அமையும்.

டொக்டர் மு. க முருகானந்தன் அவர்களுடன் மாணவர் கொள்ளும் தொடர்பு மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு நன்கு துணை புரியும். இளம் 'துளிர்கள்' பல சேர்ந்து கல்வியை வாழ்க்கைக்கான தேடலாக மாற்ற முயலும் இந்தப் பேட்டியை நடாத்தி அதனை அச்சு வாகனம் ஏற்ற முன்வந்துள்ளமை வரவேற்கப்பட வேண்டியது; போற்றப்பட வேண்டியது. மற்றவர்களால் முன் மாதிரியாக கொண்டு வளர்த்துக் கொள்ளப்பட வேண்டியது என்பதில் ஐயமில்லை.

07-01-92

திருமதி லீ. சந்திரசேகரம்
அதிபர்

யா/மெதடிஸ்த பெ. உ. பா.
பருத்தித்துறை

# அணிமொழி

ஆரம்பக் கல்வி புகட்டுவதிற் பல புதிய உத்திகள் கையாளப்பட்டு வருகின்றன. மாணவர்களைச் சூழலுடன் நேரடித் தொடர்பு கொள்ள வைத்தல், அவர்களின் செயற்பாட்டுக்கும், ஆக்கத் திறனுக்கும் ஊக்கமளித்தல் ஆகியன இவற்றுட் சில. அவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்த்தல் பிரதான இலக்காகக் கொள்ளப்படுகின்றது. அவர்களின் உள்ளத்தை விசாலமடையச் செய்வதும் சமூகப் பொருத்தப்பாடுடையதாகச் செய்வதும் சிறந்த நோக்கங்களாகக் கொள்ளப்படுகின்றன.

அதிபரும், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களுள் ஒருவராக எம் வடமராட்சிக் கல்விக் கோட்டத்தாற் தெரிவு செய்யப்பட்டவருமாகிய திரு சி. வல்லிபுரம் அவர்கள், நீண்ட காலமாக ஆரம்பக் கல்வியிற் பயிற்சி உடையவர். அவர் தூண்டுதலிலும், :பொறுட் நிறுவனத்தின் உயிர்நாடிகளாக விளங்கும் திருவாளர்கள் S, ஆனந்தராஜா, விஞ்ஞானக் கல்வி ஆசிரிய ஆலோசகராக விளங்கிய இர சந்திரசேகர சர்மா ஆகியோர்களுடைய வழிகாட்டலிலும், யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, யா/ஹாட்லிக் கல்லூரி இவற்றில் ஆண்டு ஆறிற் கல்வி கற்கும் மாணவர்களுட் சிலர் கையெழுத்துப் பத்திரிகை தொடர்பாக டாக்ட

க. முருகானந்தன் அவர்களைப் பேட்டி கண்டு, அவர் அவர்களுக்கு வழங்கிய செவ்வியையும் கண்ணுற்றேன். மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

டாக்டர் க. முருகானந்தன் அவர்கள் நடு ஊரிற் பழுத்த நல்மரம். நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் அவர் கூடப் பிறந்தவை. பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல் அவருக்கு இயல்பாய் அமைந்தவை. அவர் வைத்தியர், எழுத்தாளர், சமயத் தொண்டர், சமூக சேவையாளர். இத்தகைய பல்துறை விற்பன்னரை மாணவர் உலகம் இனங்கண்டு தொடர்பு கொண்டமை அவரது ஆசிரியனாகவும் கடமையாற்றிய எனக்குப் பூரிப்பு தருவதாகும். அவர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் மாணவர்களுக்கும், எம்சமூகத்துக்கும் பயன் தருவதாகும், இந்த உதாரண புருஷரின் வாழ்வு மாணவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை,

சிறந்த மனிதர்களின் உயர்வெல்லாம் அவர்களுக்குத் திடீரெனக் கிடைத்தவையல்ல. அவர்களின் தோழர்கள் துயில் கொள்ளும் நேரம்' அவர்கள் தாம் நெடுஞ்சாமம் வரை அயராது உழைத்தார்கள் என்ற அறிவு எமக்கு இப்பேட்டியை வாசிக்கும் போது இயல்பாகவே பிறக்கும். மாணவர்களை முழு மனிதர்களாக்க இத்தகைய சந்திப்புக்கள் என்றுமே இன்றியமையாதவை.

மாணவ உலகம் பயன் அடைவதால் இப் பேட்டிக்கு வழிகாட்டியவர்களையும், நேரமே கிடைக்காத ஒருவரிடமிருந்து பயன் தரத்தக்க பல தகவல்களைக் கறந்து கொண்ட மாணவர்களையும், அவர்களிடம் மனந்திறந்து உரையாடிய க. முருகானந்தன் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

பரந்துபட்ட மாணவ சமுதாயத்திற்கும், எம் சமூகத்திற்கும் பயன்பட இப்பேட்டி நூலுருவில் வர இருப்பது பெருமகிழ்ச்சியைத் தருவதாகும். இம்முயற்சியை மனமாரவாழ்த்துகிறேன்.

ச. செல்லத்துரை
25-12-1991

பிரதிக் கல்விப் பணிப்பாளர்
கோட்டக் கல்வி அலுவலகம்,
பருத்தித்துறை

# முகவாசகம்

"ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகரும், அதிபருமாகிய திரு சி. வல்லிபுரம் அவர்களது வழிகாட்டலில் கையெழுத்துச் சஞ்சிகைகளைத் தயாரிக்கும் மாணவ, மாணவிகள், உங்களையும் தங்களது சஞ்சிகைகளுக்காகச் செவ்வி காண விரும்புகிறார்கள்" என நண்பர் திரு இர. சந்திரசேகர சர்மா கேட்டுக் கொண்ட போது ஒரு கணம் தயக்கமாயிருந்த போதும் ஒத்துக் கொண்டேன்.

ஏனெனில் இன்றைய கல்வி முறைகள் பற்றி மிகுந்த அதிருப்தி கொண்டிருந்த எனக்கு இந்த முயற்சி நல்லதொரு திருப்பமாகத் தெரிந்தது.

'மாங்காய்க்குக் கல்லெறிந்து மகிழ மரத்தேறிப்
பாங்கான தோழருடன் பகலிரவாய் ஊர்சுற்றி
தூங்காமல் தூங்கி சுவடிதனில் கண்ணயர்ந்து
ஆங்காலம் போக்கியநாள் அடுத்து மினிவாராதோ'

என்று கவிஞர் யாழ்ப்பாணன் பாடியது போல, விளையாட்டுக்களுக்கும், பொழுது போக்குகளுக்கும், படிப்புச் சாராத பல்வேறு வெளிக்கள வேலைகளுக்கும் நிறைய நேரம் கிடைத்த, சுதந்திரமான, இனிமையான, அந்நாளைய பள்ளிக்காலம் இன்றைய பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லையே என ஏங்குபவன் நான்.

ஆனால் இந்த மாணவர்கள் ஓய்வு நேரத்தைக் கண்டு பிடித்துள்ளார்கள்! அந்த ஓய்வு நேரத்தையும் பயனுள்ள முறையில் செலவழித்துள்ளார்கள்.

கையெழுத்துச் சஞ்சிகை தயாரிப்பது சுலபமான விடயமல்ல. நிறைய வாசிக்க வேண்டும், சிந்திக்க வேண்டும், பலரையும் சந்தித்து கருத்துக்களைப் பெற வேண்டும், ஓவியங்கள் வரைய வேண்டும், எழுத்துத் திறமையைக் காட்ட வேண்டும், சஞ்சிகையின் வடிவமைப்பைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

பதினொரு வயதை மட்டும் தாண்டியுள்ள பிஞ்சுக் கரங்களுக்கு இது கனதியான வேலைதான். ஆனால் அவர்களது கையெழுத்துச் சஞ்சிகைகளைப் பார்த்த போது நான் அயர்ந்துவிட்டேன். தரமான பல்சுவை விடயங்களுடன் அழகாகவும், ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் தயாரித்திருந்தார்கள்

எனவே இவர்கள் வெறும் மாணவர்கள் அல்லர்; மாணவ மணிகள். அவர்கள் பாராட்டிற்கு உரியவர்கள். அவர்களை மேலும் உற்சாகப்படுத்தி. ஊக்கங் கொடுப்பதற்காகவே அவர்கள் என்னுடன் நடாத்திய செவ்வியை நூலுருவாகக் கொண்டு வர எண்ணினேன்.

ஒழுக்கமளிப்பது. மனோவலிமை தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது, ஒருவனைத் தன் வலிமை கொண்டு நிற்கச் செய்வது ஆகிய கொண்ட கல்வியே எமக்குத் தேவை' என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். அம்மொழிக்கிணங்க மாணவர்களை

வழிகாட்டுபவர் அதிபர். சி. வல்லிபுரம் அவர்கள். மாணவர்களுக்குக் கலங்கரை விளக்காகத் திகழும் அவர் எம் எல்லோரதும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்.

விடயங்களை இனங்கண்டு ஊக்குவிற்பதில் வல்லவர் பொருட் இணைப்பதிகாரி திரு S. ஆனந்தராசா. இந்த மாணவர்களையும் இனங்கண்டு ஊக்குவித்தவர் அவரே, அவரின் வலது கரமாக இயங்கியதுடன் இலக்கியச் செழுமையும் அநுபவ நிறைவும் கொண்ட தனது ஆலோசனைகளாலும், இந்தப் பேட்டியும் நூலாக்கமும் சிறப்படைய உதவியவர் எனது நெருங்கிய நண்பரான திரு இர. சந்திரசேகர சர்மா அவர்கள்.

இன்றைய வடமராட்சிப் பகுதி பிரதிக் கல்விப் பணிப்பாளரான திரு ச. செல்லத்துரை அவர்கள் எனது முன்னாளைய இரசாயணவியல் ஆசிரியராவார். எனது அன்பிற்கும், மதிப்பிற்கும் பாத்திரமான அவர் சிறப்பானதொரு அணிமொழியை வழங்கியுள்ளார்.

சுருக்கமான செழுமையான வாழ்த்து மொழியை அளித்திருப்பவர் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபரான ஸ்ரீமதி லீ. சந்திரசேகரம் அவர்கள்.

இவர்கள் அனைவருக்கும், பெயர் குறிப்பிடாத ஆனால் தம்மாலான ஒத்துழைப்பைத் தந்த ஏனையோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

ஆங்கில வைத்தியசாலை — எம். கே. முருகானந்தன்
பருத்தித்துறை — 05-01-1992

# மாணவ எழுத்தாளர்கள் பற்றி...

செல்வி தனஞ்சனி தட்சணாமூர்த்தி
விலாசம்: காந்தி வீதி,
துன்னாலை தெற்கு, கரவெட்டி

பொழுது போக்குகள்:
முத்திரை சேகரித்தல், அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல், பூந்தோட்டம் அமைத்தல்

விசேட திறமைகள்;

1) சஞ்சிகை எழுதல் 2) சங்கீதம் பயில்தல்
3) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
4) ஆங்கில நாடகங்களில் பங்குபற்றல்
5) தமிழ் பேச்சுப் போட்டியில் பங்குபற்றல்
6) கோலப் போட்டிகளில் பங்குபற்றல்

கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'தண்ணொளி'

செல்வி சிவஸதிகா சிவராஜா
விலாசம்: தச்சன்தோப்புக் கோயிலடி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி

பொழுது போக்குகள்: பூந்தோட்டம் வளர்த்தல்
அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல்.

விசேட திறமைகள்:

1) சஞ்சிகை எழுதுதல்
2) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) நடனம் பயில்தல்

கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'இன்பநிலா'

~~~~~~

செல்வி பாமினி பாலகிருஷ்ணன்
விலாசம்; 'நாவலர் இல்லம்'
கரவெட்டி மேற்கு, கரவெட்டி

பொழுது போக்குகள்:
அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல்

விசேட திறமைகள்:

1) சஞ்சிகை எழுதுதல்
2) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) சங்கீதம் பயில்தல்

கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'இளந்தளிர்'
~~~~~~

செல்வி அரிஷா ஜெயக்குமார்
விலாசம்: 'நர்மதகம்' கரவெட்டி மேற்கு, கரவெட்டி
பொழுதுபோக்குகள்:
வெளிநாட்டு நாணயங்கள் சேகரித்தல்
அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல்
விசேட திறமைகள்:
1) சஞ்சிகை எழுதுதல் 2) சங்கீதம் பயில்தல்
3) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
4) ஆங்கிலம் சம்பந்தமான பேரட்டிகளில் பங்கு பெறல்
கையழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'இளங்கதிர்'

செல்வி மனுமதி கிருபானந்தமனுநீதி
விலாசம்: 'மனுமதி இல்லம்'
துன்னாலை தெற்கு, கரவெட்டி
பொழுது போக்குகள்.
மீன் வளர்த்தல், வீட்டுத்தோட்டம் செய்தல்
அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல்
விசேட திறமைகள்.
1) சஞ்சிகை எழுதுதல் 2) சங்கீதம் பயில்தல்
3) 1990ம் ஆண்டு புலமைப பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
4) ஆங்கில நாடகங்களில் பங்குபற்றல்
கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'இளந்தென்றல்'

செல்வி மஞ்சுளா மகேந்திரம்
விலாசம்: 'ஜெயாபதி', கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி
பொழுது போக்குகள்: அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல், முத்திரை சேகரித்தல்
விசேட திறமைகள்:
1) சஞ்சிகை எழுதுதல்
2) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) சங்கீதம் பயில்தல்
கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: "செவ்விதழ்"

~~~~~~

செல்வி கவிதா சுப்பிரமணியம்
விலாசம்; வாரியத்தனைத் தோட்டம்
கரவெட்டி மேற்கு, கரவெட்டி
பொழுது போக்குகள்:
அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல்
முத்திரை சேகரித்தல்
விசேட திறமைகள்:
1) சஞ்சிகை எழுதுதல்
2) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) சங்கீதம் பயில்தல்
கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'இளவேனில்'
~~~~~~

செல்வி மேனகா கைலாயநாதன்
விலாசம்: 'பூமகள் இல்லம்'
துன்னாலை மத்தி, கரவெட்டி
பொழுதுபோக்குகள்:
முத்திரை சேகரித்தல்
அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல்
விசேட திறமைகள்:
1) சஞ்சிகை எழுதுதல் 2) சங்கீதம் பயில்தல்
3) விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறல்
கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'இளம் பிறை'

செல்வி ஜெயரூபினி செல்வேந்திரதாஸ்
விலாசம்: செங்குந்தர் வீதி
கரவெட்டி கிழக்கு கரவெட்டி
பொழுது போக்குகள்.
பழைய நாணயங்கள் சேகரித்தல்
முத்திரை சேகரித்தல்
விசேட திறமைகள்.
1) சஞ்சிகை எழுதுதல்
2) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) சங்கீதம் பயில்தல்
4) ஆங்கிலம் சம்பந்தமான போட்டிகளில் பங்குபெறல்
கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'தமிழமுதம்'

செல்வி சுகன்யா புஸ்பாங்கதன்
விலாசம்: 'சுகனிவாசா'
துன்னாலை தெற்கு, கரவெட்டி
பொழுதுபோக்குகள்:
முத்திரை சேகரித்தல்
அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல்
விசேட திறமைகள்:
1) சஞ்சிகை எழுதுதல் 2) சங்கீதம் பயில்தல்
3) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'வசந்த முல்லை'

செல்வி கார்த்திகா கமலேஸ்வரன்
விலாசம்: 'செல்வபதி'
துன்னாலை மத்தி, கரவெட்டி
பொழுது போக்குகள்.
வீட்டுத்தோட்டம் அமைத்தல்
முத்திரை சேகரித்தல்
விசேட திறமைகள்.
1) சஞ்சிகை எழுதுதல்
2) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) நடனம் பயில்தல்
கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'இளமதி'

செல்வி சிவகாமி தர்மலிங்கம்

விலாசம்: 'இலட்சுமி வாசா'
துன்னாலை கிழக்கு, கரவெட்டி

பொழுது போக்குகள்: வீட்டுத்தோட்டம் அமைத்தல்
முத்திரை சேகரித்தல்

விசேட திறமைகள்:

1) சஞ்சிகை எழுதுதல் 2) கோலம் போடுதல்

3) 1990ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
('வடமராட்சிக் கோட்டத்தில் முதலாவது' யாழ்மாவட்டத்தில் இரண்டாவது. பெற்ற புள்ளி 177)

4) சங்கீதம் பயில்தல்

கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'உதயபானு'

செல்வி கார்த்திகா சந்திரசேகர சர்மா

விலாசம்; பன்னையம்பதி ஒழுங்கை
பருத்தித்துறை

பொழுது போக்குகள்:

அறிவை வளர்க்கும் புத்தகங்கள் வாசித்தல்
முத்திரை சேகரித்தல்

விசேட திறமைகள்:

1) சஞ்சிகை எழுதுதல்
2) சங்கீதம் பயில்தல்
(1ம் தரம் 1ம் பிரிவில் அதிதிறமைச் சித்தி)
3) நடனம் பயில்தல்
(1ம் தரம் 1ம் பிரிவில் அதிதிறமைச் சித்தி)
4) வீணை வாசித்தல்
5) கோலம் போடுதல்

கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'விண்மதி'

செல்வன் சிவசுப்பிரமணியம் செந்தில்குமரன்
விலாசம்: 'மிதிலை வாசா'
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

பொழுது போக்குகள்:
மீன் வளர்த்தல், துடுப்பாட்டம் விளையாடல்

விசேட திறமைகள்:

1) சஞ்சிகை எழுதுதல்
2) 1989ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) சங்கீதம் பயில்தல்
4) வயலின் பயில்தல்
5) மிருதங்கம் பயில்தல்

கையெழுத்துச்சஞ்சிகையின் பெயர்: ' காந்தள்மலர்

செல்வன் வல்லிபுரம் சஞ்சீவன்

விலாசம்: 'வசந்தம்' கிழவி தோட்டம் ஒழுங்கை
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

பொழுதுபோக்குகள்:

மீன் வளர்த்தல், உதைபந்தாட்டம், கிறிக்கற் விளையாடுதல், சிறுகதைகள் வாசித்தல்

விசேட திறமைகள்:

1) சஞ்சிகை எழுதுதல்
2) 1989ம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) சங்கீதம் பயில்தல்
4) வயலின் பயில்தல் (தரம் 1 சித்தி)
5) மிருதங்கம் பயில்தல்

கையழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'செவ்வானம்'

செல்வன் முருகானந்தன் ரம்யன்

விலாசம்: ஆங்கில வைத்தியசாலை
பிரதான வீதி, பருத்தித்துறை

பொழுது போக்குகள்.

மருத்துவத் தாவரங்கள் சேகரித்தல், செஸ் கரம் விளையாட்டுக்கள், மீன் வளர்த்தல், முத்திரை சேகரித்தல், அறிவியல் நூல்கள், கதைகள் வாசித்தல்

விசேட திறமைகள்:

1) சஞ்சிகை எழுதுதல்
2) 1900ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியெய்தியமை
3) கவிதை, கட்டுரை பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றுதல், பரிசுகள் பெறல்.
4) யோகாசனப் போட்டியில் பரிசு
5) சங்கீதம் பயில்தல்
6) மிருதங்கம் பயில்தல்
7) நாடக, நடன, கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளல்

கையெழுத்துச் சஞ்சிகையின் பெயர்: 'துளிர்'

~~~~~~
~~~~~~

# கேள்விகளின் முன்னால்...

31-08-1991 சனிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு டாக்டர் முருகானந்தன் அவர்களுடைய இல்லத்திற்கு எங்களின் சஞ்சிகைகளின் சார்பில் சந்திப்பு ஒன்றை நிகழ்த்துவதற்காகச் சென்றிருந்தோம்.

அப்பொழுது அவருடைய துணைவியார் திருமதி மணிமாதேவி முருகானந்தன் அவர்களும், அவரது இரு குழந்தைகளாகிய செல்வன் ரம்யன், செல்வி எழில், இவர்களது பேரனும் டாக்டரின் தந்தையுமாகிய திரு. மு. கதிரவேற்பிள்ளை அவர்களும் எங்களை வரவேற்றுக் கலந்துரையாடினார்கள்.

கலந்துரையாடும் வேளையில் டாக்டர் தம் குடும்பத்தவர்களை ஒவ்வொருவராக எமக்கு அறிமுகம் செய்து வைத்ததோடு எங்களையும் சுய அறிமுகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாறே நாங்கள் ஒவ்வொருவரும் எம்மை அறிமுகம் செய்தோம்.

இக் கலந்துரையாடலின் போது எங்கள் சஞ்சிகைகளுக்கு வழிகாட்டும் திரு. சி. வல்லிபுரம் அதிபர்

அவர்களும், 'விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்' என்ற நூலை எழுதியவரும், விஞ்ஞான ஆசிரியருமான இரா. சந்திரசேகரசர்மா அவர்களும் சமுகம் அளித்திருந்தனர். இவர்களோடு எமக்கு உதவியாக வந்த ஆசிரியைகள் திருமதி சந்திரவதனா கிருபானந்த மனுநீதி அவர்களும், திருமதி அற்புதநாயகி தட்சணாமூர்த்தி அவர்களும் சமுகம் தந்திருந்தனர்,

இவ்வேளையில் டாக்டர் அவர்கள் எம் எல்லோரையும் தனது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, மருத்துவமனையின் பல்வேறு கூறுகளின் செயற்பாட்டினை விளக்கி வைத்தார். அத்தோடு எங்கள் ஒவ்வொருவரினதும் உயரம், நிறை, கண்பார்வை, காதுகளின் செயற்பாடு, இரத்த அமுக்கம் போன்ற பல்வேறு விடயங்களைப் பரிசோதனை செய்தார்.

பின் எம் எல்லோரையும் ஒன்றுகூட வைத்து, 15-9-91 ஞாயிற்றுக்கிழமை எமது சஞ்சிகைகளுக்குப் பேட்டி அளிக்க திகதியும் குறிப்பிட்டுத் தந்ததோடு, தேநீர் விருந்தொன்றையும் அளித்தார். அன்றைய நிகழ்வுகள் எங்கள் நன்றி கூறலோடு முடிவுற்றது.

பின்னர் நாம் எல்லோரும் குறிப்பிட்ட திகதியாகிய 15-9-91 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு டாக்டர் எம், கே. முருகானந்தன் அவர்களது இல்லத்திற்குச் சென்றிருந்தோம். எங்கள் சஞ்சிகைகளுக்குப்

பேட்டி அளிக்க ஆவலோடு காத்திருந்த டாக்டர் குடும்பத்தவர்கள் எம்மை அன்புடன் வரவேற்றனர்,

எங்கள் சஞ்சிகைக் குழுவின் சார்பில் இளவேனில் சஞ்சிகையின் ஆசிரியை செல்வி சி. கவிதா பேட்டியை ஆரம்பித்து வைத்தார். அவரைத் தொடர்ந்து இன்ப நிலா, செவ்வானம், காந்தள் மலர், இளந்தளிர், இளம் பிறை, செவ்விதழ், வசந்தமுல்லை, இளந்தென்றல், தமிழமுதம், தண்ணொளி, இளமதி, உதயபானு, இளங் கதிர், துளிர், விண்மதி போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியர்களாகிய முறையே செல்வி சி. சிவாஸ்திகா, செல்வன் வ சஞ்சீவன், செல்வன் சி. செந்தில்குமரன் செல்வீ பா. பாமினி, செல்வி க. மேனகா, செல்வி ம. மஞ்சுளா, செல்வி க. சுகன்யா, செல்வி க. மதுமதி, செல்வி செ. ஜெயரூபினி, செல்வி த. தனஞ்சனி, செல்வி யோ. சுதர்சனு, செல்வி ஜெ. அபிராமி, செல்வி க. கார்த்திகா, செல்வி த. சிவகாமி, செல்வி ஜெ. அரிஷா, செல்வன் மு. ரம்யன், செல்வி ச. கார்த்திகா ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் பங்கேற்ற செவ்வானம், காந்தமலர், துளிர் சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் யா/ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் டாக்டர் எம். கே. முருகானந்தன் அவர்களுடன் நடாத்திய பேட்டியை வாசகர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

# கேள்விகள் - பதில்கள்

★ நாங்கள் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 6-ம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவிகள் தங்களிடம் எங்களின் கையெழுத்துச் சஞ்சிகைகளின் சார்பில் பேட்டி காண வந்துள்ளோம். இவ்வாறான பேட்டிகளை நீங்கள் விரும்புவீர்களா?

மிகவும் வரவேற்கிறேன். ஏனென்றால் நீங்கள் நிறையப் படிக்கவும், உங்களிடம் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்களை வெளிப்படுத்தவும் உதவுகிறது. அத்துடன் உங்கள் முயற்சி உங்களுடன் படிக்கின்ற ஏனைய மாணவர்களுக்கும் உந்துகோலாக உதவி அவர்களையும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட வைக்கும். படிப்பதனாலும், எழுதுவதனாலும் உங்களை முழுமையான மனிதர்களாக ஆக்கிக் கொள்ளலாம். இவ்வாறான சந்திப்புகள் நீங்கள் பலருடனும் கூச்சமின்றி தன்னம்பிக்கையோடு பழகுவதற்கு உதவும்.

★ தாங்கள் தங்களின் ஆரம்பக் கல்வியை எங்கே கற்றீர்கள்?

எனது ஆரம்பக் கல்வியை வியாபாரிமூலையைச் சேர்ந்த மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றுக்கொண்டேன்.

★ ஆரம்பக் கல்வியை கற்ற காலத்தில் தங்களுக்கு அடிப்படைக் கல்வியை வளர்ப்பதற்கு உதவிய ஆசிரியர் யார்? அவரை ஏன் விரும்புகிறீர்கள் என்பதற்கான காரணங்களைக் கூறுங்களேன்?

எனக்கு ஆரம்ப அடிப்படைக் கல்வியை ஊட்டுவதில் முன்பு கூறிய பாடசாலையின் அதிபராக விளங்கிய திரு. சுப்பிரமணியம் அவர்களையும், திரு. சபாபதிப்பிள்ளை ஆசிரியரையும் குறிப்பிடலாம்.

அவர்கள் இருவரும் எங்களுக்கு வெறும் பள்ளிக் கல்வியை மாத்திரம் போதிக்காமல், சுத்தத்தைப் பேணுவது, மற்றவர்களுடன் மரியாதையாகப் பழகுவது, தினமும் இறைவனைத் துதிப்பது, பெரியோர்களை மதிப்பது போன்ற நல்வாழ்க்கை நெறி முறைகளையும் போதித்தனர். எனவே தான் நான் அவர்களை மிகவும் பிடித்தமான ஆசிரியர்களாக மதிக்கிறேன்.

★ உயர்கல்வியை எந்தப் பாடசாலையில் கற்றீர்கள்?

நான் எனது உயர்கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பெற்றுக் கொண்டேன். கண்டிப்பு,

நேர்மை, நிருவாகத்திறன், ஒழுக்கம் பேணல், நேரம் தவறாமை போன்ற நற்பண்புகளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த அதிபர் க. பூரணம்பிள்ளை அவர்களின் வழி காட்டலிற் கல்வி கற்கும் பேற்றை அப்பொழுது பெற்றேன்,

ஹாட்லிக் கல்லூரியில் நான் பெற்ற கல்வியும், வாழ்க்கை முறையும் தான் இன்றும் என்னைத் தலை நிமிர்ந்து நிற்க வைக்கின்றன. ஹாட்லிக்கல்லூரி மாண வன் என்று சொல்லிக் கொள்வதில் நான் இன்றும் என்றும் பெருமை கொள்கிறேன்.

★ கல்வித் துறையில் ஆர்வம் காட்டியது போன்று தங் களுடைய பாடசாலை வாழ்நாளில் இலக்கியத்துறை யில் ஆர்வம் காட்டியது உண்டா?

ஆம். பத்து வயதளவில் இருக்கும்பொழுதே நான் எழுதிய 'எனது கிராமம்' என்ற கட்டுரை தினகரன் பத்திரிகையின் மாணவர் பகுதியில் வெளிவந்தது.

இதைத் தவிர எனது உறவினரான பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை, கவிஞர் யாழ்ப்பாணன் (வே சிவக்கொழுந்து) ஆகியோரின் தொடர்பினால் சிறு வயதிலேயே இலக்கியம் பற்றிய ஆர்வம் முகிழத் தொடங்கிவிட்டது.

★ பாடசாலைச் சஞ்சிகைகளில் தங்களுடைய ஆக்கங்கள் ஏதும் வெளிவந்திருக்கிறதா?

ஆம். ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த சஞ்சிகைகளில் எனது கட்டுரைகள் வெளிவந்துள்ளன. 'குறள் காட்டும் நட்பு' என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரை பல ஆசிரியர்களதும் பாராட்டைப் பெற்றது.

★ தாங்கள் கல்வித் துறையிலும் இலக்கியத் துறையிலும் ஆர்வம் கொண்டது போல விளையாட்டுத் துறையிலும் ஈடுபாடு கொண்டது உண்டா? அவ்வாறாயின் விபரமாகக் கூறுங்களேன்?

விளையாட்டுத் துறையில் எனக்கு ஈடுபாடு மிகவும் குறைவாகவே இருந்து வந்தது. சக மாணவர்களுடன் சேர்ந்து விளையாடுவதைத் தவிர விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை.

கதைப்புத்தகம் வாசிப்பது, முத்திரை சேகரிப்பது போன்றவையே எனது முக்கிய பொழுதுபோக்குகளாக இருந்து வந்தன.

★ பல்கலைக்கழகக் கல்வியை எந்த ஆண்டில் எந்தப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டீர்கள்?

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கொழும்பு வளாகத்தின் மருத்துவ பீடத்தில் 1970 முதல் 1975 வரை எனது பல்கலைக் கழகக் கல்வியைப் பெற்றேன்.

★ பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் ஏதாவது தொழிற் துறையை கருத்திற் கொண்டு கற்றீர்களா?

சிறுவயது முதலே மருத்துவனாக வரவேண்டும் என்பதே எனது அவாவாக இருந்தது. வெள்ளைப் போத்தல்களில் பல்வேறு நிற நீர்க்கலவைகளை மருந்தாக வைத்து விளையாடுவது எனக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது.

★ பல்கலைக் கழகக் கல்வியை கற்ற காலத்தில் தங்களின் மனதைக் கவர்ந்த பேராசிரியர் யார் என்பதைக் கூறுங்களேன்?

பல்கலைக்கழகக் கல்வி கற்ற காலத்தில் என் மனதைக் கவர்ந்தவர் 'நந்தி' என்ற புனைபெயரில் இலக்கியம் படைத்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் அவர்களாகும். அவர் எங்களுக்கு மருத்துவக் கல்வியைக் கொடுத்ததுடன், நாம் கற்கும் கல்வியை எமது மக்களுக்கும் பயன்படுமாறு மருத்துவக் கட்டுரைகளும், சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்களும் படைப்பதில் வல்லவராக இருந்தார். இவர் தான் என்னுடைய இலட்சிய நாயகனாகத் திகழ்ந்தார்; இன்றும் திகழ்கிறார்.

★ தாங்கள் கல்வி கற்ற காலத்தில் எம்மைப் போன்று கையெழுத்துச் சஞ்சிகை ஆக்கங்களில் ஈடுபட்டதுண்டா? அவ்வாறாயின் அது பற்றி விபரமாகக் கூறுங்களேன்?

ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் கையெழுத்துச் சஞ்சிகைகள் நடாத்துவதில் நானும்,

எனது சில நண்பர்களும் சேர்ந்து உழைத்து வந்தோம். உங்களது சஞ்சிகைகள் போலல்லாது அது சுவரில் பதித்த பலகையொன்றில் கதை, கட்டுரை, கவிதை சித்திரங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் ஆகியவை எழுதப்பட்ட தாள்கள் பொருத்தப்பட்டதாக இருந்தது. இதனால் ஓய்வு நேரங்களில் ஏனைய வகுப்பு மாணவர்களும் பார்த்து ரசிப்பதுண்டு.

அத்துடன் எனது ஊர் வியாபாரிமூலை சனசமூக நிலையம் நடாத்திய ''கலைமணி'' என்ற கையெழுத்துச் சஞ்சிகையிலும் எழுதியிருக்கிறேன்.

★ தாங்கள் கல்வி கற்ற காலத்தில் தங்களோடு கல்வி கற்ற சக மாணவர்களுள் தங்களின் மனதில் இடம் பிடித்த நண்பன் யார்? அவரைத் தாங்கள் விரும்புவதற்குக் காரணம் என்ன?

தும்பளையைச் சேர்ந்த மோகனதாஸ் என்ற நண்பர் ஹாட்லிக் கல்லூரியிலிருந்து மருத்துவக் கல்லூரி வரை எனது இனிய தோழராகவே இருந்தார்.

எனக்கு வேண்டிய, தனது குறிப்புகளைக் கூட பரீட்சைக்கு முன் தந்து உதவுவார். என்னை அதிகாலையில் எழுந்து படிக்கத் தூண்டுவார். அவர் எழுப்பி விட்டாலும் நான் தூங்கிவிடுவதுண்டு. நான் இரவில் அதிக நேரம் படிப்பதுண்டு. ஆனால் அதிகாலையின் சுகமான தூக்கத்தை இழக்க இசைவதில்லை. அவர்

இப்பொழுது இங்கிலாந்துதேசத்தில் மருத்துவராகக் கடமையாற்றுகிறார்.

அவர் தான் மாத்திரம் படிப்பதுடன் நின்று விடாது, தனது நண்பர்களும் பரீட்சைகளில் திறமையாகச் சித்தி எய்த வேண்டும் என விரும்புவார். அதற்கான உதவிகளையும் செய்ய முன் நிற்பார். அத்துடன் மென்மையான பேச்சும், கோபம் கொள்ளாத குணமும், எல்லோரையும் அனுசரித்துப் போகும் பழக்கமும் உடையவர். கூடாத பழக்க வழக்கங்கள் எதுவும் இல்லாதவர். ஒரு நல்ல நண்பனுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். எனவேதான் அவரை மிகவும் விருப்பிய நண்பனாகக் கொண்டிருக்கிறேன்.

ஃஃஃ

இதுவரை தங்களுடன் தங்களின் கல்வி தொடர்பான விடயங்களை அறிந்தோம். இனி தங்களது தொழிற்துறையுடன் தொடர்புடைய விடயங்களைப் பற்றி அறிய ஆவற்படுகிறோம்.

★ உயர்கல்வியை முடித்துக் கொண்டு முதன் முதல் கடமைக்காக எந்த அரசாங்க மருத்துமனைக்கு நியமிக்கப்பட்டீர்கள்? அந்த மருத்துவமனையில் கடமையில் ஈடுபட்ட முதல்நாள் அனுபவம் பற்றி விபரமாகக் கூறுங்களேன்?

முதலாவதாக பதுளை பெரியாஸ்பத்திரியில் கடமையை ஏற்றேன் முதல் நாள் இரவு தனியாக அவ

சர சிகிச்சைகளைக் கவனிக்கும் பொறுப்பை எனக்குக் கொடுத்தனர். அன்று கடுமையான முட்டு இழுப்புடன் ஒரு வயோதிபர் வந்திருந்தார். மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்தார். அவரால் சாய்ந்து படுக்க முடிய வில்லை. நாக்கு நீலம் பாரித்திருந்தது. உடல் வியர்த் துக் குளிர்ந்திருந்தது. உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தார்.

எனக்கோ ஒரே திகில்! பயம்!! என்ன செய்வது என்று தெரியாத தயக்கம்; பதற்றம்

ஏனெனில் தொய்வு நோயாளிகளும், இருதய இயக் கம் தளரும் நோயாளர்களும், மேலோட்டமான பார் வையில் ஒரே மாதிரிக் காணப்படுவதுண்டு.

ஐந்து வருடங்கள் இந்நோய்கள் பற்றியும், அவற்றிக்கிடையேயான வேறுபாடுகள் பற்றியும் விபர மாக நிறையப் படித்திருந்தோம். பரீட்சையில் சித்தி யும் பெற்றுவிட்டோம்.

ஆனால் இப்பொழுது நோயாளியை நேருக்கு நேர் பார்க்கிறேன். கேள்விக்கு விடை சொல்லும் நேர மல்ல இது! அந்த மனிதனின் வாழ்வும் மரணமும் என் கையில். நான் அந்தக் கணத்தில் எடுக்கும் முடி வில்தான் அவரது உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

பெரிய டாக்டரை அந்த அர்த்த இராத்திரியில் அழைக்க முடியாது. கூட இருந்த தாதிப் பெண்ணின் உதவியைக் கொண்டும், எமக்கு

முதல் வருடம் சேவையில் சேர்ந்து விட்ட டாக்டர் ஒருவரின் அனுபவக் கூற்றுக்களைக் கொண் டும், பிராண வாயுவைக் கொடுத்தும், சேலைன் ஏற் றியும், சில ஊசி மருந்துகள் ஏற்றியும், அந்த மனித னின் உயிரைக் காப்பாற்றி வைத்திருந்தேன்.

மறுநாள் காலை அந்நோயாளியைப் பார்த்த வைத்திய நிபுணர் S. R. கோட்டேகொட எனது சிகிச் சையில் திருப்தியடைந்தது எனக்கு நிறைவைச் கொடுத்தது

★ வைத்தியத் துறையில் ஈடுபாடு கொண்டு மக்களுக்கு தொண்டு புரிய வேண்டும் என்ற ஆவலினால்தான் நீங்கள் இத்துறையைத தேர்ந்தெடுத்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன். இதைப் பற்றித் தங் களுடைய அபிப்பிராயம் என்ன?

நீங்கள் சொல்வது சரிதான். நான் பிறந்து வளர்ந்து வாழ்கின்ற சமுகத்திற்கு என்னாலான கடமை யைச் செய்ய வேண்டும் என்பதே என்னுடைய எண் ணமாயிருந்தது.

மருத்துவத்துறை என்பதால் வெறுமனே மக் களுக்கு உதவும் துறையாக நின்றுவிடாமல், உயிர் காக்கும் துறையாக அமைந்துவிட்டது எனக்கு மகிழ்ச்சி யும் மனநிறைவும் தரும் விடயமாகும்.

★ மருத்துவத் துறையில் நீங்கள் எந்தத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றிருக்கிறீர்கள்?

நான் சிறப்புப்பட்டம் எதுவும் பெறவில்லை. குடும்ப வைத்தியத் துறையிலேயே ஈடுபட்டு வருகிறேன் குடும்ப வைத்தியர்களின் கல்லூரியின் அங்கத்தவனாகவும் (M C G P) தெரிவு செய்யப்பட்டுள்ளேன். சீன வைத்தியத் துறையான அக்குபங்சரிலும் (Acupuncture) ஜேர்மன் வைத்தியத்துறையான ஹோமியோபதியிலும் (Homeopathy) மேலதிகப் பயிற்சி பெற்றிருக்கிறேன். இதன்காரணமாக D. Ac(S. L); M F Hom(S.L) ஆகிய பட்டங்களையும் உபயோகிக்கும் உருத்துடையவனாகிறேன்.

★ மதங்கள் மனித உயிர்களை நெறிப்படுத்தி வளர்த்தெடுக்கின்றன. மருத்துவம் மனித வளத்தைப் பேணிக்காத்து வருகின்றன. இந்த வகையில் மதப் பழக்க வழக்கங்கள் மருத்துவத்துறைக்கு எவ்வளவு தூரம் பயனுள்ளதாக அமைகின்றன?

நாம் நோயின்றி வாழவேண்டுமேயாயின் சுகாதாரத்தைப் பேண வேண்டியது அவசியமாகும். இந்த வகையில் பார்க்கும்போது எமக்கு ஆரம்ப சுகாதாரத்தைப் போதிப்பது எமது மதம் தான்.

காலையில் பல் துலக்குவது, மலசலம் கழித்து அங்கங்களை தூய நீரினால் சுத்தப்படுத்துவது, தினமும்

குளித்துத் தூய்மையாக இருப்பது, தோய்த்து உலர்ந்த சுத்தமான ஆடைகளையே அணிவது போன்ற சகல தற்சுகாதார முறைகளையும் எமது மதம் கடைப்பிடிக்கத் தூண்டுகிறது. இவற்றை ஆறுமுக நாவலர் தனது 'சைவவினா விடை'யில் கூறியிருக்கின்றார். இவற்றைத் தவிர உணவுச் சுகாதாரம், சுற்றாடல் சுகாதாரம் ஆகியவற்றையுமே எமது மதம் போதிக்கிறது.

எமது பாரம்பரிய உணவாகிய சைவ உணவின் (தாவர போசனம்) சிறப்பு இப்பொழுது உலகிலே பெருமளவு சிறப்பாக உணரப்படுகிறது. அத்துடன் பிள்ளையார் கோயிலில் குட்டிக் கும்பிடுவது, தோப்புக்கரணம் போடுவது, விழுந்து படுத்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வது ஆகியன எமது உடலை திடகாத்திரப்படுத்தும் நல்ல உடற்பயிற்சிகளாகும். இறைவனை நினைத்து மனத்தை ஒருமுகப்படுத்துவதன் மூலம் மனப்பதற்றம், மன விரக்தி, மனஅழுத்தம் போன்ற மனோவியல் நோய்கள் வராமல் தடுக்கலாம்.

★ நோயாளி ஒருவரை மருத்துவத்தின் மூலமோ அல்லது நம்பிக்கையின் மூலமா குணப்படுத்துவது சுலபம்?

வைத்தியம் என்பது நோயாளிக்கு ஏற்படுகின்ற நம்பிக்கையும், நோய்க்கு ஏற்ற பொருத்தமான மருந்தை உட்கொள்ளுவது இரண்டும் சேர்ந்ததுதான்.

ஒரு நோயாளிக்கு ஒரே மருந்தை இரண்டு வைத்தியர்கள் கொடுக்கும்பொழுது, ஒரு வைத்தியரின் மருந்திற்கு நோய் கட்டுப்படாமல் அதிகரிப்பதும், மற்றவரின் மருந்திற்கு உடனடியாகக் குணமடைவதும் நாம் தினசரியாக அனுபவத்தில் காண்பதுதான். எனவே சரியான மருந்தைக் கொடுப்பதுடன் நோயாளியின் மனநிலையை ஆதரவோடும் அனுதாபத்தோடும் அணுகி அவரது பூரண நம்பிக்கையைப் பெறுவது ஆகிய இரண்டிலும் சேர்ந்தே தங்கியிருக்கிறது என்பது தெளிவு.

★ மருத்துவ சேவையில் வைத்தியராக ஈடுபடும் நீங்கள் குடும்பத்தில் தங்கள் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் சேவையாற்ற முடிகிறதா?

தற்போது தனியார் வைத்தியனாகக் கடமையாற்றும் நான், இருபத்திநான்கு மணித்தியாலமும் வைத்திய சேவைக்கு அர்ப்பணிக்க வேண்டி இருக்கிறது. இதனால் மனைவி, குழந்தை ஆகியோரின் விடயங்களில் போதிய அக்கறை எடுக்க முடியாதிருக்கிறது. தற்பொழுது மாலை 6 மணிமுதல் 8 மணிவரை இன்னொரு வைத்தியரை எனக்காக வைத்தியசேவையில் ஈடுபட வைத்திருப்பதன் மூலம் அந்த இரண்டு மணித்தியாலங்களை குடும்பத்தினருக்காக ஒதுக்கியிருக்கின்றேன். இதன்மூலம் எனது குழந்தைகளின் கல்வி வளர்ச்சி, மனவளர்ச்சி ஆகியவற்றிலும், ஏனைய குடும்ப

விடயங்களிலும் ஓரளவேனும் அக்கறை எடுக்க முடிகிறது.

★ பற்பல சாதனைகள் புரிந்துவரும் நீங்கள் மருத்துவத் துறையில் மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத நோய்களின் பெயர்களைக் கூறுங்களேன்?

விஞ்ஞானமும் மருத்துவத்துறையும் எவ்வளவோ முன்னேறிவிட்ட பொழுதும் மனிதனின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட எத்தனையோ விடயங்கள் இன்னமும் இருக்கவே செய்கின்றன.

தொற்றுநோய்களைப் பொறுத்தவரையில் வைரஸ் கிருமிகளால் ஏற்படும் நோய்களுக்கு எந்தவிதமான மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. உதாரணமாக சின்னமுத்து, கொப்பளிப்பான், கூகைக்கட்டு, செங்கண்மாரி போன்ற சாதாரண வைரஸ்நோய்கள் மருந்து இல்லாவிட்டாலும் தாமாகவே குணமாகிவிடும். ஆனால் எயிட்ஸ்நோய், விசர்நாய்க் கடியினால் ஏற்படுகின்ற நீர்வெறுப்புநோய் ஆகியன மரணம் நிச்சயிக்கப்பட்ட நோய்களாக இருந்து மனிதகுலத்தைக் கதிகலங்க வைக்கின்றன.

மற்றும் சலரோகம், ஆஸ்த்மா, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல நோய்களைக் கட்டுப்படுத்த முடியுமேயன்றி பூரணமாகக் குணப்படுத்த முடியாது.

அதேநேரத்தில் கத்தியின்றி இரத்தமின்றி லேசர் கதிர்கள் மூலம் சத்திரசிகிச்சை செய்தல், மனிதகலங்களின் அடிப்படையாக இருக்கும் பரம்பரை அலகுகளை (*Gene*) மாற்றுவதன் மூலம் பல பரம்பரை நோய்களைத் தடுக்க முயல்தல், பரம்பரை அலகுகளை மாற்றீடு செய்வதன் மூலம் பல புதிய தடுப்பு மருந்துகளையும், ஏனைய மருந்துகளையும் தயாரித்தல், பக்கவிளைவுகளின்றி ஒலிக்கதிர்கள் மூலம் (*Ultrasonic scaning*) உள்ளுறுப்புக்களைப் படம் எடுத்தல் போன்ற பல விடயங்களில் மருத்துவத்துறை வியக்கத்தக்க வகையில் முன்னேறியிருக்கிறது என்பதும் உண்மையே.

★ குழந்தைகளுக்கு எந்தெந்தக் காலங்களில் நோய்த் தடுப்பு ஊசி மருந்துகள் ஏற்றவேண்டும்? என்ன மருந்துகளை ஏற்றவேண்டும்?

பிறந்தவுடன் சயரோகத் தடுப்பு ஊசியான *B. C. G* யும், 3-ம், 5-ம், 7-ம், 18-ம் மாதங்களில் போலியோ (*Polio*) தடுப்பு மருந்தும், ஏற்பு, தொண்டைக்கரப்பன், குக்கல் ஆகிய நோய்களுக்கு எதிரான முக்கூட்டு (*Triple*) ஊசியும், 9-ம் மாதத்தில் சின்னமுத்துத் தடைஊசியும் போடப்படுகின்றன.

கூகைக்கட்டு, செங்கண்மாரி, கொப்புளிப்பான், ஜேர்மன் சின்னமுத்து, போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகள் உலகநாடுகள் பலவற்றில் வழமையாக உபயோகிக்கப்பட்டாலும், இலங்கையில் இன்னமும் பெரியளவில் பாவனைக்கு வரவில்லை.

★ தாங்கள் வைத்தியராகக் கடமையாற்றும் காலத்திலும் சரி அதற்கு முன்பும்சரி தங்களின் சிந்தையில் நிலைத்துவிட்ட ஏதாவது ஒரு நிகழ்வு உண்டா? அதாவது மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதும் உண்டா? அதுபற்றிக் கூறுங்களேன்.

வைத்தியத்துறையில் மறக்கமுடியாத சம்பவங்கள் அதிகமாகவே இருக்கின்றன. இதுபற்றி சிரித்திரன் பத்திரிகையில் "ஒருடாக்டரின் டயரியிலிருந்து" என்ற தலைப்பில் பல விடயங்களைத் தொடர்கட்டுரையாக எழுதியிருந்தேன்.

ஒரு சம்பவத்தை மாத்திரம் இப்பொழுது குறிப்பிடலாம் என நினைக்கிறேன், ஒருநாள் ஒருநோயாளியை மயக்கநிலையில், உயிராபத்தான நிலையில் கொண்டுவந்திருந்தார்கள். ஏதோ ஒரு அலர்ஜியினால் உடலெல்லாம் சிவத்துத் தடித்து வீங்கியிருந்தது. இரத்தஅழுத்தம் அளவிடமுடியாத அளவிற்குக் குறைந்திருந்தது. நாடித்துடிப்பு மிகவும் பலவீனமாகயிருந்தது. எதனால் இந்த ஒவ்வாமை (allergy) நிலை நேர்ந்ததென்று தெரியவில்லை. ஆயினும் அவர் உயிர்

பிழைப்பதற்கு வேண்டிய ஊசி மருந்துகள், குளுக்கோஸ், சேலைன் ஆகியவற்றைக் கொடுத்து அவருக்கு சுய உணர்வு வரச்செய்தோம்.

அப்பொழுதுதான் எனக்கு அந்தவிடயம் ஞாபகத்திற்கு வந்தது!

அவருக்கு அஸ்பிரின் மருந்து சற்றேனும் ஒத்துக் கொள்ளாது. ஆயினும் இதுபற்றி அவருக்கு முன்பே விபரமாகக் கூறியிருக்கின்றோம். அஸ்பிரின் மருந்தை எக்காரணம் கொண்டும் உட்கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்தியிருக்கிறோம். ''இது எப்படி நடந்தது'' என்று அவரை விசாரித்தேன்.

''நான் அஸ்பிரின் மருந்து போடவில்லை'' என்று பயந்து கொண்டே கூறினார்.

''...ஆனால் தலையிடிக்காக மருந்துக் கடையில் இரண்டு குளிசைகள் வாங்கிப் போட்டேன். எனக்கு அஸ்பிரின் ஒத்துக்கொள்ளாது, வேறு குளிசை தாருங்கள் என்று கேட்டேன்.''

மருந்துக் கடைக்காரன் தானே அரை வைத்தியனாக மாறி 'கோடிஸ்' குளிசை கொடுத்தாராம். அதை விழுங்கிவிட்டுப் படுத்தவர் படுத்தவர்தான். ஒவ்வாமை ஏற்பட்டு அரை மயக்கத்தில் கிடந்தவரை காரில் ஏற்றிக் கொண்டு உடனடியாக மனைவி மருத்துவ மனைக்குக் கொண்டு வந்திருந்தாள்.

நல்ல காலம்! அப்பொழுது பெற்றோலும் இருந்தது, காரும் ஓடியது. இன்றைய நிலையாக இருந்தால் அதோ கதிதான்!

கோடிஸ் மருந்தில் அஸ்பிரினும் கலந்திருக்கிறது. இது மருந்துக் கடைக்காரனுக்கு தெரியவில்லைப் போலும். மருந்துகளை வைத்தியரின் ஆலோசனையின்றி உபயோகித்ததால் வந்த வினை இது.

இதுவரை மருத்துவத்துறை தொடர்புடைய சில விபரங்களை அறிந்து கொண்டோம். மேலும் தங்களின் இலக்கியத்துறை தொடர்புடைய விடயங்களை அறிய ஆவற்படுகின்றோம்.

★ தங்களுக்கு கலை இலக்கியத்துறையில் எவ்வளவு தூரம் ஈடுபாடு உண்டு என்பது பற்றிக் கூறுங்களேன்?

சிறு வயது முதலே இலக்கியத்தில் ஈடுபாடு இருந்ததை முன்பே கூறியிருந்தேன். அந்த நாட்களிலேயே தீவிர வாசகனாக இருந்திருக்கிறேன். கல்கி, ஆனந்த விகடன், கல்கண்டு, குமுதம் போன்ற ஜனரஞ்சகப் பத்திரிகைகளைப் படிப்பதுடன் நின்றுவிடாது பல கனமான சிற்றிலக்கிய சஞ்சிகைகளையும் வாசிப்பதில் ஆர்வம் காட்டி வந்தேன். ஈழத்துச் சஞ்சிகைகளான மல்லிகை. சிரித்திரன் ஆகியவற்றுடன் கணையாழி தாமரை, தீபம் போன்ற தரமான தென்னிந்திய இலக்கியச் சஞ்சிகைகளையும் படித்து வந்திருக்கிறேன். இச்சஞ்சிகைகளும் இதற்குப் பின் வெளி வந்த அலை

சஞ்சிகையும் எனது இலக்கியப் பார்வையை ஆழமாக்கவும், விரிவாக்கவும் உதவி செய்தன.

இப்போது நான் பெரும்பாலும் பொது மக்களுக்கான மருத்துவக் கட்டுரைகளை எழுதுவதிலேயே ஈடுபட்டிருக்கிறேன். ஈழநாடு, சஞ்சீவி, ஈழநாதம், முரசொலி, உதயன் ஆகிய யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளிலும், வீரகேசரி, தினகரன் ஆகிய கொழும்புப் பத்திரிகைகளிலும் எனது மருத்துவக் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. முரசொலியில் வாராவாரம் 'வைத்தியக் கலசம்' என்ற தொடரில் ஐம்பத்தைந்துக்கு மேற்பட்ட கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதியிருப்பது குறிப்பிடத் தக்கது. உள்ளம், திசை போன்ற சஞ்சிகைகளிலும் மருத்துவக் கட்டுரைகள் எழுதியிருக்கிறேன்.

கவிதை, சிறுகதை, இலக்கிய விமர்சனம் போன்ற துறைகளிலும் சில ஆக்கங்கள் செய்துள்ளேன்.

★ பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டப்படிப்பு மிகவும் கடுமையானது எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்நேரத்தில் கலை, இலக்கிய, சமூக சேவை போன்ற ஏனைய விடயங்களில் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்களா?

மருத்துவப்படிப்பு கடினமானதாகவும் நீண்ட ஐந்து வருடங்களைக் கொண்டிருந்ததும் உண்மைதான்.

ஆயினும் இத்தகைய ஈடுபாடுகள்தான் சமூகம் பற்றிய பார்வை விசாலமடையவும், மற்றவர் பிரச்சனைக ளில் அக்கறை செலுத்தவும், முழுமையான மனித னாக என்னை வளர்த்துக் கொள்ளவும் உதவின.

மருத்துவபீடத்தின் இந்து மன்றத்தின் இதழா சிரியராக இருந்த பொழுது கனதியான ஒரு நவராத் திரி மலரை வெளியிட்டு வைத்தேன். தலைவராக இருந்த காலத்தில் வாராந்த பிரார்த்தனைக் கூட்டங் களை ஆரம்பித்து வைத்தேன் சுவாமி சாந்தா னந்தா போன்ற பல சமயப் பெரியோர்களை அழைத்து, சமயக் கூட்டங்களை நடாத்தினேன். சிவ ராத்திரி தினத்தின் போது குறிஞ்சிக்குமரன் ஆலயத் திற்கான யாத்திரை; ஐந்து தினங்கள் நீடித்த இலங்கையின் பல்வேறு பிரதேச தலங்களுக்கான சுற் றுலா ஆகியவற்றை ஒழுங்கு செய்ததையும் குறிப்பிட லாம்.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் தமிழ் மன்றத் திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு செயற்குழுவில் பணியாற்றினேன். இத்தமிழ் மன்றம் நடாத்திய பல்கலைக் கழங்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டி யில் 'நாட்டார் பாடல்கள்' பற்றிய எனது கட்டுரை இரண்டாம் பரிசைப் பெற்றது. இம்மன்றம் நடாத் திய நாடகப் போட்டியில் நான் நடித்த நாடகம் முதல் இடத்தையும், சிறந்த நடிகர் என்ற பரிசை எனக்கும் பெற்றுக் கொடுத்தது.

கவியரங்கிற்குத் தலைமை தாங்கினேன். இக் காலத்தில் வானொலியில் இளைஞர்களுக்காக நடாத் தப்பட்ட 'சங்கநாதம்' என்ற நிகழ்ச்சியில் புதுக் கவிதை பற்றிய கலந்துரையாடலிலும் வேறும் பல நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றினேன். 'மாணிக்கம்' போன்ற சஞ்சிகைகளில் எனது கவிதைகள் வெளி யாயின. இப்படிப் பற்பல துறைகளில் ஈடுபாடுகள் எனக்கு அப்பொழுது இருந்தன.

★ வைத்தியத் துறையுடன் தொடர்புடைய வழிகாட்டி நூல்கள் ஏதாவது உருவாக்கியுள்ளீர்களா? அவ்வா றாயின் அது பற்றிக் கூறுங்களேன்

ஐந்து நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

1) சிறுவர்களின் கண்களைக் காக்க வாரீர்
2) தாயாகப் போகும் உங்களுக்கு
3) எயிட்ஸ்
4) பாலியல் நோய்கள்
5) போதையைத் தவிருங்கள்

★ இலக்கியத்துறையில் ஆர்வம் கொண்ட நீங்கள் சிறுகதை, கட்டுரை போன்றவற்றை எழுதியிருந் தால் அது பற்றிக் கூறுங்களேன்.

மல்லிகை, அமிர்தகங்கை ஆகிய சஞ்சிகைகளில் சிறு கதைகளும், சிரித்திரன், மல்லிகை, வீரகேசரி ஆகிய வற்றில் அநுபவக் குறிப்புக்களும், இலக்கிய விமர்ச சனக் கட்டுரைகளும் எழுதியிருக்கிறேன்.

கனடாவில் இருந்து வெளிவரும் 'நான்காவது பரிமாணம்' என்ற சஞ்சிகையில் 'சோதனை' என்ற சிறுகதை இம்மாதம் வெளிவந்திருக்கிறது.

★ பெரும்பாலான பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் உங்களது படைப்புக்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது, வானொலி, தொலைக்காட்சிகளில் உங்களது பங்களிப்பு எப்படி இருந்தது?

கொழும்பிலிருந்து இயங்குவதால் இவற்றில் அடிக்கடி கலந்து கொள்ள முடிவதில்லை என்ற போதிலும் கொழும்பு சென்ற நேரங்களில் சில நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியிருக்கிறேன். 'பூவும் பொட்டும்' நிகழ்ச்சியிலும் 'விஞ்ஞான அரங்கிலும்' மருத்துவம் சம்பந்தமான பேட்டிகளையும், உரைகளையும் வழங்கியிருக்கிறேன். 'கலைப் பூங்கா' நிகழ்ச்சியில் இலக்கியம் சம்பந்தமான எனது பேட்டியும். இலக்கிய விமர்சன, உரைகள் சிலவும் இடம் பெற்றன.

ரூபவாஹினியில் 'எயிட்ஸ்' நோயைப் பற்றிய எனது கருத்துக்கள் விளக்கப்படங்களுடன் அரை மணி நேர நிகழ்ச்சியாக ஒளிபரப்பப்பட்டது. ரூபவாஹினியில் ஒளிபரப்பான எயிட்ஸ் சம்பந்தமான முதல் தமிழ் நிகழ்ச்சி இது என்பது குறிப்பிடத்தக்கது.

★ 'சாகித்திய அக்கடமி' பற்றியும் அது அளிக்கும் பரிசுகள் பற்றியும் சிறு விளக்கம் தருவீர்களா?

'சாகித்திய அக்கடமி' என்பது இந்து சமய கலை கலாச்சாரத்துறை அமைச்சினால் இலங்கையில் உள்ள சிறந்த தமிழ் எழுத்தாளர்களுக்கு வருடந்தோறும் பரிசளிப்பதாகும். சிறுகதை, நாவல், நாடகம், கவிதை சிறுவர் இலக்கியம், அறிவியல், வாழ்க்கை வரலாறு இலக்கிய வரலாறு போன்ற துறைகளுக்கு இப்பரிசு வருடந்தோறும் வழங்கப்பட வேண்டும். ஆயினும் கடந்த பத்து வருடங்களாக செயலற்றிருந்த இத்திட்டம் 1989ல் இருந்துதான் இயங்க ஆரம்பித்திருக்கிறது

★ தங்களுடைய ஒரு நூலுக்கு 'சாகித்திய அக்கடமி' பரிசு கிடைத்ததாக அறிகின்றோம அது எந்த நூலுக்கு கிடைத்தது என்று கூறுங்களேன்?

'தாயாகப் போகும் உங்களுக்கு' என்ற நூலுக்கு 1989ம் ஆண்டிற்கான அறிவியற்துறைக்கான சாகித்தியப் பரிசு கிடைத்தது. பத்தாயிரம் ரூபா பணமும் இலக்கிய வித்தகர் என்ற பட்டமும் இதற்காகக்கொடுக்கப்பட்டன.

★ தங்களின் நூல்களுக்கு மக்களின் வரவேற்பு எப்படி இருந்தது?

நல்ல வரவேற்பும் ஆதரவும் இருந்தன. வெளியிட்டு மூன்று மாதங்களுக்குள்ளேயே எயிட்ஸ் நூலின் முதல் ஆயிரம் பிரதிகளும், வெளியிட்டு ஒரு வருடத்திற்குள் தாயாகப் போகும் உங்களுக்கு நூலின் இரண்டா

பிரதிது ஐந்நூறு பிரதிகளும் விற்றுத் தீர்ந்து விட்டன. சிறுவர்களின் கண்ணைக் காக்க வாரீர், 'பாலியல் நோய்கள்' ஆகிய நூல்களின் பிரதிகளும் கூட கைவசம் இல்லை. இது நல்ல வரவேற்பையே காட்டுகின்றது.

★ தங்கள் நூல்களில் ஏதாவது இந்தியாவில் வெளி வர இருக்கின்றனவா?

'எயிட்ஸ்' என்ற நூல் இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் சென்னை N. C. B H. நிறுவனத்தால் வெளி யிடப்பட்டுள்ளது.

'தாயாகப் போகும் உங்களுக்கு' என்ற நூலும் விரைவில் இதே நிறுவனத்தால் வெளியிடப்பட இருக் கிறது.

★ தாயாகப் போகும் உங்களுக்கு என்ற நூல் உலகின் பல பாகங்களிலும் வசிக்கின்ற தமிழர்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப் பெற்றது என்பதாக அறிகின் றோம், இது பற்றி சிறிது சொல்லுங்களேன்?

தாயாகப் போகின்ற தமிழ்ப் பெண்கள் உலகில் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்க ளுக்கு இந்நூல் தேவைப்படுகிறது. அவுஸ்திரேலியா. கனடா, நோர்வே, இங்கிலாந்து, இத்தாலி போன்ற நாடுகளிலிருந்தெல்லாம் இந்நூல் விரும்பிப் பெறப்படு கிறது. பெரும்பாலும் இங்குள்ளவர்கள் வெளிநாட்டி லிருக்கும் உறவினர்களுக்கு இந்நூலைத் தபால் மூலம் அனுப்பி வைக்கிறார்கள்,

அண்மையில் ஒரு குறிப்பிட்ட அளவு தொகை நூல்களை அனுப்பி வைக்கும்படி இங்கிலாந்திலிருந்து ஒரு வேண்டுதல்' வந்தது. ஆயினும் பிரதிகள் கைவசம் இல்லாததால் அந்த வேண்டுகோளை நிறை வேற்ற முடியவில்லை.

★ தங்களது நூல்கள் ஏதாவது இரண்டாவது பதிப்பாக வெளிவந்திருக்கிறதா?

ஆம் 'எயிட்ஸ்' என்ற நூலின் இரண்டாவது பதிப்பு முதல் பதிப்பு, வெளிவந்த ஒரு வருட காலத்தினுள்ளேயே (தை 1990ல்) வெளியிடப்பட்டுவிட்டது.

இப்பொழுது இந்நூலை இந்தியாவிலுள்ள NCBH நிறுவனமும் வெளியிட்டுள்ளதால் மூன்றும் பதிப்பும் வெளிவந்ததாகக் கொள்ளலாம், இரண்டாம் பதிப்பில் மாணவர்களின் பரீட்சைத் தேவை கருதி எயிட்ஸ் கிருமியின் உயிரியல் என்ற பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

★ முரசொலியில் தாங்கள் நெடுங்காலம் தொடர்ந்து எழுதிய 'வைத்திய கலசம்' எப்பொழுது நூலாக வெளிவரும்?

முன்பு குறிப்பிட்ட 'ஒரு டொக்டரின் டயறியில் இருந்து..' என்ற கட்டுரைத் தொடரும், முரசொலியில் வெளிவந்த 'வைத்திய கலசம்' கட்டுரைத் தொடரும் இரு நூல்களாக வெளிவருவதற்குத் தயாராக

இருக்கின்றன. ஆயினும் மின்சாரமின்மை, பத்திரிகைத் தாள் தட்டுப்பாடு காரணமாக இவற்றை அச்சடித்து வெளியிட முடியவில்லை. சாதகமான சூழ்நிலை ஏற்பட்டதும் அவை உடனடியாக வெளியிடப்படும்.

மேலும் 'குழந்தை வளர்ப்பு', 'குழந்தை இல்லாதவர்களுக்கான ஆலோசனைகள்' ஆகிய நூல்களையும் எழுத இருக்கிறேன்,

★ தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில் முதலுதவி பற்றிய அறிவை நாம் ஒவ்வொருவரும் பெற்றிருத்தல் அவசியம் என்பது எமது அபிப்பிராயம், இதைப் பற்றித் தங்களின் அபிப்பிராயம் என்னவென்று கூறுங்களேன்.

நீங்கள் சொல்வது ஒரு வழியில் சரிதான். இன்றைய போர்க்காலச் சூழ்நிலைக்கு முதலுதவி பற்றிய அறிவு மிகமிக அவசியந்தான்.

ஆனால் முதலுதவி என்பது போர்க்காலச் சூழலுக்கு மாத்திரமின்றி எந்தக் காலத்திற்கும் அவசியமானது என்பதை வலியுறுத்த விருப்புகிறேன். விபத்துக்கள் எந்தக் காலத்திலும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் போர்க்காலத்தில் அதிகம் என்பது உண்மை. எனவே முதலுதவி பற்றிய அறிவை நாங்கள் எக்காலத்திலும் அறிந்து கொள்ள வேண்டி

யது அவசியம் என்பது எனது தீர்க்கமான கருத்தாகும்.

★ வைத்தியசாலையில் 'அக்யூபங்சர்' சிகிச்சைகளையும தாங்கள் செய்வதாக கேள்விப்பட்டோம். இதைப் பற்றியும் எந்தெந்த நோய்களுக்கு இதனைப் பயன் படுத்தலாம் என்பது பற்றியும் சிறிது கூறுங்களேன்?

அக்யூபங்சர் வைத்தியத்தை, கொழும்பு தெற்கு பெரியாஸ்பத்திரியில் பேராசிரியர் அன்ரன் ஜெயசூரியாவிடம் கற்றேன், இது ஒரு சீன வைத்திய முறையாகும். உடலின் குறிப்பிட்ட சில பகுதிகளில் கூர்மையான ஊசிகளை ஏற்றிக் குறிப்பிட்ட சில நேரம் அப்படியே விட்டு, பின்பு கழற்ற வேண்டும். சில நோய்களை உடனடியாகக் குணமாக்க முடியும்; வேறு பல நோய்களுக்கு தொடர்ந்து பல நாட்களுக்கு சிகிச்சை செய்ய வேண்டி நேரிடலாம்.

சில உணர்வு நிலைகளை ஊசி மூலம் தூண்டுவதால் நோய் குணமாகிறது. சில தருணங்களில் ஏற்றிய ஊசிகளை மின்சாரம் மூலம் தூண்டுவதன் (*Electric Stimulation*) மூலம் அதிக பயனைப் பெற முடிகிறது. லேசர் ஒளிக்கதிர்கள் மூலமும் (*Lazer Therapy*) ஊசி ஏற்றாமலே இத்தகைய சிகிச்சை செய்யப்படுகிறது

வாதம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு அக்யூபங்சர் மிக நல்ல பலனைக் கொடுக்கிறது. இறுகிய தோள் மூட்டு (Frozen Shoulder) என்ற நோய்க்கு ஆங்கில வைத்தியம் உட்பட ஏனைய சிகிச்சை முறைகளால் குறிப்பிடத்தக்க பயனில்லாத போதும் அக்யூபங்சர் உடனடியாகக் குணமளிக்கிறது. பல மாதங்களாகவே கைகளை உயர்த்த முடியாமலும், குடுமி முடிய இய லாமலும், முதுகு சொறிய இயலாமலும் இந்நோயால் அவஸ்தைப்பட்ட எத்தனையோ பேருக்கு காலில் ஒரு ஊசி ஏற்றுவதன் மூலம் உடனடியாக நிவாரணம் கொடுத்திருக்கிறேன்.

தொய்வு, வெண்குஷ்டம், பீனிசம், பாரிசவாதம், தலைமயிர் உதிர்தல், கபால இடி, பல்வலி, தோல் வியாதிகள் போன்ற பல்வேறு நோய்களுக்கும் அக்யூ பங்சர் வைத்தியம் பலனளிக்கிறது.

அக்யூபங்சர் முறைமூலம் சிறந்த வலி நிவாரணம் அளிக்கலாம். இதன் காரணமாக விறைப்பு ஊசி யின்றி பல்லுப் பிடுங்கவும், மயக்க மருந்தின்றி நோயாளி உரையாடிக் கொண்டும், நீராகாரம் அருந் திக் கொண்டும் இருக்கையில் பெரிய சத்திர சிகிச்சை களையும் அக்யூபங்சரின் உதவியுடன் செய்கிறார்கள்.

★ சமூக சேவையில் ஈடுபாடு உங்களுக்கு இருப்பது நாங்கள் அறிந்ததே. அது பற்றி சில முக்கியமான விடயங்களைக் கூறுங்களேன்.

லயன்ஸ் கழகம் இயங்கிய காலத்தில், அதனூடாக இலவச மருத்துவச் சேவை, அகதிகளுக்கு துணிமணி பாத்திரங்கள் வழங்குவது, ஏழைச் சிறுவர்களுக்கு நத்தார், புதுவருட பண்டிகைக் காலங்களில் புத்தாடைகள், பரிசுகள் வழங்குவது போன்றவற்றைக் குறிப்பிடலாம். பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவராகவும், பின்பு மாவட்ட முதல்வராகவும் கடமையாற்றியிருக்கிறேன்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடாத்திய இலவச மருத்துவ சேவையில் நீண்ட காலம் கடமையாற்றியுள்ளேன்.

வனவிலங்குகள் பாதுகாப்புச் சங்கம், இலங்கைச் சைவ மன்றம், அறிவோர் கூடல், யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபை, பல ஆலயங்களினதும், சனசமூக நிலையங்களினதும் செயற்பாடு ஆகியவற்றிலும் ஈடுபட்டு வருகிறேன்.

★ தங்களுக்கு எத்தனை குழந்தைகள் அவர்கள் என்ன செய்கிறார்கள்?

இரண்டு குழந்தைகள். 'ரம்யன்' உங்கள் கூடவே இருக்கிறான். ஹாட்லிக் கல்லூரியில் ஆறாம் ஆண்டிற் கல்வி கற்கிறான். மகள் 'எழில்' ஐந்து வயது. 'ஞானசம்பந்தர்' கலைமன்றத்தில் பள்ளி முன்னிலைக் கல்வி பயில்கிறாள்.

★ தங்களின் துணைவியார் தொழிற்துறையில் எவ்வித மான ஒத்துழைப்புக்களைத் தருகிறார்?

தொழிற்துறையைப் பொறுத்த வரையில் வைத்திய அறையிலிருந்து நோயாளிகளைப் பரிசோதித்து மருந்து எழுதுவது ஒன்றுதான் எனது வேலை. மருந்து கொள்வனவு விநியோகம், நிர்வாகம், கணக்குவழக்கு எல்லாம் என் மனைவியின் வேலைதான். இலக்கியத் துறையில் எனது முதல் வாசகர் மட்டுமின்றி, என்னை எழுத ஊக்குவிப்பது, ஆலோசனைகள் வழங்குவது, பிரதி செய்தல் எல்லாம் என் மனைவிதான்.

★ தங்களுக்கு கோபமே வருவதில்லையாம். இவ்வளவு ஓய்வில்லாத வேலைகள் மத்தியிலும் எவ்வாறு உங்களால் மகிழ்ச்சியோடும் புன்சிரிப்போடும் இருக்க முடிகிறது.

குடும்ப சூழ்நிலையில் எனக்கிருக்கிற அமைதியும் மகிழ்ச்சியும்தான் காரணம் என நினைக்கிறேன்.

# கேள்விகளின் பின்னால்...

## எங்களின் நன்றி

இதுவரை தங்களோடு, எங்களின் சஞ்சிகைகளின் சார்பாக கேட்கப்பட்ட வினாக்களுக்கு சிறப்பான விளக்கங்களையும், பேட்டியையும் அளித்தமைக்காக சஞ்சிகைக் குழுவின் சார்பில் தங்களுக்கு நன்றி கூறுகின்றோம். அது மட்டுமன்றி சென்ற ஆவணித் திங்கள் முப்பத்தோராம் நாள் சனிக்கிழமையன்று தங்களது இல்லம் நோக்கி வந்த போது எம்மை வரவேற்று உபசரித்தது மாத்திரமன்றி, இன்றும் வரவேற்று உபசரித்தமைக்காக நன்றி கூறுகிறோம்.

அத்துடன் எமக்குத் தேநீர் விருந்தொன்றை அளித்த தங்கள் துணைவியாருக்கும் நன்றி கூறுகிறோம்.

இந்நிகழ்விற்கு ஒத்துழைப்பளித்த திரு. இர. சந்திரசேகர சர்மா அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

இவ்வாறான இலக்கிய நிகழ்வுகளுக்கு வழிகாட்டும் எங்கள் ஆசிரியரான திரு. சி. வல்லிபுரம் அதிபர் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

டொக்டரின் நன்றி .

இந்தக் கலந்துரையாடல் மூலம் எனது கருத்துக் களைச் சொல்ல வாய்ப்பளித்த மாணவ எழுத்தாளர் களாகிய உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் பாடசாலைக்கு வெளியே இத்தகைய வெளிக்கள முன்னோடி முயற்சிகளில் உங்களை ஆர் வத்துடன் ஊக்குவிப்புச் செய்து வழி காட்டும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகரும் அதிபருமான திரு. சி. வல்லிபுரம் அவர்கட்கும் எனது நன்றிகள்.

மாணவர்களைச் சிந்திக்கத் தூண்டி செயலில் இறங்கச் செய்து ஊக்குவித்த போரூட் இணைப்பதிகாரி திரு. எஸ். ஆனந்தராஜா அவர்களுக்கும், அவர் சார் பிலும் போரூட் சார்பிலும் இங்கு நேரில் வந்து ஆலோ சனைகளையும், உதவிகளையும் செய்த விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் திரு இர. சந்திரசேகர சர்மா அவர் களுக்கும எனது அன்பான நன்றிகள்.

வணக்கம்.

# அந்த நாள் ஞாபகம் வந்ததே...

பாட்டி மடியமர்ந்து பழங்கதைகள் பாங்குறவே
நீட்டி அவள் சொல்ல நெடுநேரம் கேட்டிருந்து
காட்டு நரிகளையும் கரடி புலிகளையும்
வீட்டிருந்து கண்டநாள் மீட்டுமினி வாராதோ?

தோட்டந் துரவுகளில் சுவரின் சரிவுகளில்
நீட்டிக் கான்முடக்கி நிமிர்ந்து குதித்தெழுந்து
ஆட்டங்கள் போட்டுவிட்டு அமர்ந்தொடுங்கிப் பின்கதவால்
வீட்டிற்குள் நுழைந்திடுநாள் மீட்டுமினி வாராதோ

மட்டிக் கழுதையென மண்டு மிக முடமெனக்
குட்டுகள் பலவிழவே குடல்நடுக்க மெடுத்துவிட
எட்டுடன் எட்டினை இருபதுமுறை கூட்டித்
தட்டுத் தடுமாறும் தருணமினி வாராதோ?

பரீட்சை முடிந்ததடா 'பாஸ்பெயில்' பின் பார்ப்பமடா
வெருட்சி தீர்ந்ததடா விடிவிளக்கும் நூர்ந்ததடா
சுருட்டிச் சுவடியினைச் சுவரிடுக்கில் வைத்துவிட்டு
மருட்சிமான் கன்றெனவே வாவும்நாள் வாராதோ;

கவிஞர் யாழ்ப்பாணன்

# இன்று குழந்தைகள் நீங்கள்

இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகாள்
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்
இன்று குழந்தைகள் நீங்கள்!

குன்றினைப் போல் உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப் போராடுதல் வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்விற் புதுமை காணவேண்டும்
இன்று குழந்தைகள் நீங்கள்!

பல்கலை ஆய்ந்து தொழில்பல கற்றும்,
பாட்டிற் சுவைகாணும் திறமையும் உற்றும்,
அல்லும் பகலும் இந் நாட்டுக் குழைப்பீர்கள்
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்
இன்று குழந்தைகள் நீங்கள்!

-:பாவேந்தர் பாரதிதாசன்:-

விலை ரூபா 20/-

அபிராம் அச்சகம் - அல்வாய்